சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:21.03.2025

DW1: சண்முகப்பிரியா க/பெ– கோமதிகுமார்

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இந்த வழக்கில் நானும், 1ம் பிரதிவாதியும் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளோம். நான் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகளை தான் அவரும் சொல்லியுள்ளார். அவர் சாட்சியம் அளித்தது சம்மந்தமாக எனக்கு தெரியாது. தாவா சொத்தை எனது தகப்பனார் உடன் பிறந்த சகோதரர்களிடம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். கிரையத்தின் அடிப்படையில் தான் ஆறுமுகத்திற்கு எனது தகப்பனார் தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். ஆறுமுகத்திற்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் என்னிடம் இல்லை. அசல் பத்திரம் இல்லாமலேயே நான் ஆறுமுகத்திடம் இருந்து தானசெட்டில்மெண்ட் எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். ஆறுமுகம் எனக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்டில் அசல் பத்திரம் பற்றி சொல்லவில்லை. எனது தகப்பனார் ஆறுமுகத்திற்கு 1/7 பங்கு எழுதிக்கொடுத்துள்ளார். அந்த 1/7 பங்கை தான் நானும் எழுதி வாங்கியுள்ளேன். தோராயமாக மொத்த சொத்து சுமார் 4 செண்ட் இருக்கும் என்றால் சரிதான். எனக்கு எழுதிக்கொடுத்தது ½ செண்டிற்கு கொஞ்சம் அதிகம் என்றால் சரிதான். 1/7 பங்கு உள்ள ஆறுமுகம் மொத்த சொத்திற்கும் ஆறுமுகம் பெயரில் பட்டா வாங்கியிருந்தார். அந்த பட்டாவை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த மொத்த சொத்தில் 4 கதவு எண்கள் உள்ளது. அந்த 4 கதவு எண்கள் உள்ள வீடுகளிலும் நான் தான் ஆக்கிரமிப்பு செய்து வைத்துள்ளேன் என்றால் சரியல்ல, ஆனால்

நான் தான் அனுபோகத்தில் இருக்கிறேன். வீட்டுவரி ரசீது ஆறுமுகம் பெயரில் உள்ளது. அவ்வாறு உள்ளதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. ரசீது, பட்டா குறித்து வருவாய்துறையை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான். தானசெட்டில்மெண்டிற்கு பிரதி உபகாரமாக ஆறுமுகம் என் தகப்பனாருக்கு என்ன செய்தார் என்று கேட்டால் மாதம் மாதம் உணவும் பண உதவியும் கொடுத்தார் ஆனால் அவர் அதை பெற்றுக்கொள்ளவில்லை. ஆறுமுகம் எனது தகப்பனாருக்கு ஒருவேளை உணவு கூட போடவில்லை என்றால் சரியல்ல. 4 வீடுகளையும் நாங்கள் ஆக்கிரமிப்பு செய்து கொண்டு எனது தகப்பனாரரை வீட்டை விட்டு வெளியேற்றி விட்டோம் என்றால் சரியல்ல. தாவா சம்மந்தமாக எனது தகப்பனார் மாவட்ட ஆட்சியரிடமும் காவல்துறையிலும் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த விசாரணையில் மாதம் ரூ.2500 கொடுப்பதாக ஆறுமுகம் கூறியிருந்தார். அவ்வாறு கொடுத்ததை அவர் வாங்கவில்லை. பணம் கொடுத்தால் வாங்காமல் இருக்க மாட்டார் என்றும், நான் பணம் கொடுத்து வாங்க மறுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு மறுத்திருந்தால் மணி ஆர்டர் மூலம் அனுப்பியிருக்கலாம் என்றும், அவ்வாறு எதுவும் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எனது தகப்பனார் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்டில் அவரை பராமரிக்க வேண்டும் என்ற நிபந்தனை இல்லாததால் அவரை பராமரிக்க வேண்டியதில்லை என்று எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் தானசெட்டில்மெண்ட் ஆறுமுகத்திற்கு எழுதிக்கொடுத்ததினால் எனது தகப்பனாரை பராமரிப்பது எங்கள் கடமை என்றால் சரிதான். எனது

தகப்பனாருக்கு நாங்கள் அடிப்படை வசதி செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் வலிப்பு நோயாளி என்றால் சரிதான். எங்கள் துன்புறுத்தலினால் எனது தகப்பனாரின் உடல்நிலை அடிக்கடி பாதிக்கப்படுகிறது என்றால் சரியல்ல. தற்போது எனது தகப்பனார் குடியிருக்க வீடு இல்லை என்றால் என் தம்பி அருணகிரி வீட்டில் அவரது பராமரிப்பில் உள்ளார். மேற்படி 4 வீடுகளில் உள்ள கழிப்பறையை கூட அவரை பயன்படுத்தவிடவில்லை என்றால் அவர் தான் வருவதில்லை. எனது தகப்பனார் நோயாளி என்று கூட பாராமல் அவரை நாங்கள் பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் ஆறுமுகத்திற்கு எழுதிய தானசெட்டில்மெண்ட் உள்ள மதிப்பின் அடிப்படையில் நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டது என்றால் எனக்குதெரியாது. நான் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.76/2022 ன் வழக்கின் பிராது படி எனது தகப்பனாரின் தற்போதைய வயது 75 என்றால் சரிதான். எனது தகப்பனாரை சரியாக பராமரிக்காததால் மேற்படி தானசெட்டில்மெண்ட் ரத்து செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனது தகப்பனாரின் உடல்நிலை குறித்து நீதிமன்ற ஆணையர் நியமித்து விசாரணை செய்தால் தெரியவரும் என்றால் சரிதான். மொத்த சொத்தில் யார் யார் புழங்குகிறார்கள் என்பதை அறிய நீதிமன்ற ஆணையர் நியமித்து விசாரணை செய்தால் தெரியவரும் என்றால் சரிதான். எனக்கு நீதிமன்ற ஆணையர் நியமிக்க ஆட்சேபணை இல்லை. மின் கட்டணம் பாட்டி மகமாயி அம்மாள் பெயரில் உள்ளது. நான் அத்துமீறி எல்லா சொத்துக்களையும் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் எனது தகப்பனார் விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.